நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

புதுச்சேரி 20.3.2023 திங்கட்கிழமை முரசு: 18 ஓசை: 45 பக்கம் 6 600 காசு சுபகிருது ஆண்டு பங்குனி 6ஆம் தேதி

# புதுவை ஜிப்மரில் உலக கண் அழுத்த நோய் கருத்தரங்கு

புதுச்சேரி, மார்ச். 20-
ஜிப்மர் கண் மருத்துவத் துறை சார்பில் உலக கண் அழுத்தநோய் வாரம் கடைபிடிக்கப்பட்டது.

இதையொட்டி ஆப்டோமெட்ரி மாணவர்களுக்கான சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. இதில் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி, பிரிஸ்ட் பல்கலைக்கழகம், ஆறுபடைவீடு மருத்துவக் கல்லாரி, புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி சார்பில் 170 ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர். கருத்தரங்கில் ஜிப்மர் கண் மருத்துவத்துறை தலைவர் நிருபமா கஸ்தூரி வரவேற்றார். புதுவை சுகாதாரத்துறை இயக்குனர் ஸ்ரீராமுலு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

ஜிப்மர் மருத்துவ கண் காணிப்பாளர் துரைராஜன், நோய் பரிசோதிப்பதன் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

இதில் விழிப்புணர்வு வீடியோ காண்பித்து விரிவுரை நடத்தப்பட்டது.